6053

# அன்மொழித் தொகை

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY, ADYAR, MADRAS

## ஆகுபெயர்; இருபெயரொட் டுப்பெயர்

### தொகைநிலைத் தொடர்மொழி

சொற்கள் வெளிப்படை நிலையிலும் குறிப்பு நிலையிலும் பொருள் புலப்படுத்தி வருவன. திணையோடு, வேற்றுமை, உணர்த்தின் பெயர்ச் சொல், காலம் உணர்த்தின் வினைச்சொல் எனவும், மற்று இவற்றுக்கு உறுதுணை யாகிச் சொல் லிடை வரும் இயல்புடையன இடைச்சொல், எனவும் பெயரொடும் வினையொடும் பொருளால் உரிமைப்படுதலை இயல்பாகக் கொண்டன உரிச்சொல் எனவும் கூறுவர் மொழியறி புலமை முந்தையோ ராய வல்லோர்.

அவ்வகைத் தனிமொழிகள் நிறுத்த சொல்லும் குறித்து வரு கிளவியுமாய் வேற்றுமைவழிப் பொருளில், அல்லது, அல்வழிப் பொருளில் ஒன்றை யொன்று அடுத்து நின்று தொடர்மொழி யாகும். தொடர்மொழிகள் தொகைநிலைத் தொடர்மொழி, தொகாநிலைத் தொடர் மொழி என இருவகைப்படும்

“ஒரு சொல்முன் ஒரு சொல் வருங்கால் தொகைநிலை வகையான் வருதலும், தொகாநிலை வகையான் வருதலும் என இரண்டல்லது இல்லை.” — தெய்வச்சிலையார், தொல். சொல். 1, உரை.

“தொகை என்னும் பலபொருள் ஒரு சொல் ஈண்டு உருபு மறைதலை உணர்த்தி நின்றது,

*‘ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள்வயின்*
*மெய்யுருபு தொகா இறுதி யான’ (தொல். சொல் 101)*

என்ப வாகலின்.” — சிவஞானமுனிவர்.

*பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை*
*முதலிய பொருளின் அவற்றின் உருபுஇடை*
*யொழிய இரண்டு முதலாத் தொடர்ந்துஒரு*
*மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்மொழி.*
*(நன். 360)*

**"இவ்வுருபுகள் தொகுமிடத்து உருபும் பொருளும் (பயனும்) உடன் றொகுதலும், ஒருவழி உருபே தொகுதலும் என இரு வகைய" – கல்லாடனார், ('பிறிது பிறது' என்பதன் உரையில்.)**

*வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை*
*அன்மொழி எனஅத் தொகைஆறு ஆகும் (நன். 361)*

**(1) வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்மொழி,**
**(2) உவமத் தொகைநிலைத் தொடர்மொழி,**
**(3) வினைத் தொகைநிலைத் தொடர்மொழி,**
**(4) பண்புத் தொகைநிலைத் தொடர்மொழி,**
**(5) உம்மைத் தொகைநிலைத் தொடர்மொழி,**
**(6) அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழி,**

**என ஆறு வகைப்படும் எனல் முன்னை யாசிரியர் கருத்து என்பதாகத் தொல்காப்பியர் கூறுகிறார்:**

*வேற்றுமைத் தொகையே, உவமத் தொகையே*
*வினையின் தொகையே, பண்பின் தொகையே*
*உம்மைத் தொகையே, அன்மொழித் தொகை என்று*
*அவ்வாறு என்ப தொகைமொழி நிலையே.*
*(தொல். 895)*

## 1. வேற்றுமைத் தொகை

*"வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல."*
*(தொல். 896)*

*'இரண்டு முதலாம் இடையாறு உருபும்*
*வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே' (நன். 364)*

6053



(க) சீதை பூங்குழலை முடித்தாள் — பூ + குழல் —பூவையுடைய குழல் என விரியும். 2-ம் வேற்றுமை ஐ உருபு (உடைய என்னும் பயனோடு) தொக்கது.

(உ) கண்ணன் பொற்றொடி செய்தான்.—பொன் + தொடி— பொன்னால் ஆகிய தொடி என விரியும். 3-ம் வேற்றுமை ஆல் உருபு (ஆகிய என்னும் பயனோடு) தொக்கது.

(ங) முருகன் செய்யுளிலக்கணம் படித்தான் — செய்யுள் + இலக்கணம் — செய்யுளுக்கு இலக்கணம் என விரியும். 4-ம் வேற்றுமை கு உருபு தொக்கது.

(ச) அங்கு மலையருவி கண்டோம். மலை + அருவி— மலையின் விழும் அருவி என விரியும். 5-ம் வேற்றுமை இன் உருபு (விழும் என்னும் பயனோடு) தொக்கது.

(ரு) இந்த யானைக்கோடு நெடிது – யானை + கோடு — யானையது கோடு என விரியும் 6-ம் வேற்றுமை அது உருபு தொக்கது

(சா) குன்றக் கூகை கூவிற்று — குன்றம் + கூகை —குன்றத்தில் வாழும் கூகை என விரியும். 7-ம் வேற்றுமை இல் உருபு (வாழும் என்னும் பயனொடு) தொக்கது.

## ii. உவமத் தொகை

"உவமத் தொகையே உவம இயல" (தொல். 897)
'உவம உருபுஇலது உவமத் தொகையே' (நன். 365)

(க) "வினையுவமத்தொகை: புலிப் பாய்த்துள் (புலி அன்ன பாய்த்துள் என விரியும் )

(உ) பயனுவமத் தொகை: மழை வண்கை (மழை அன்ன வண்கை என விரியும்)

(ஊ) மெய்யுவமத் தொகை: துடி நடு (துடி அன்ன நடு என விரியும்.)

(எ) உருவுவமத் தொகை: முத்தமுறுவல் (முத்தம் அன்ன முறுவல் என விரியும்.)

"துடி நடு (துடியை அன்ன நடு) என்புழி (2-ம்) வேற்றுமை யுருபும் உவமவுருபும் என இரண்டுந் தொக்கவேனும், துடிபோலும் நடு எனத் தொகைக்கு உவமப் பொருளே சிறப்புடைத் தாகலின் அத் தொகை யென்பது" (இளம்பூரணர்.)

"மழை யன்ன வண்கை என்றவழி இரண்டாம் வேற்றுமை உருபு விரியாமலும் தான்நின்று உவமிக்கப்படும் பொருளைக் காட்டுதலின் இவ்வாறு வருஞ் சொற்களை உவமத் தொகை என்றார்." (தெய்வச்சிலையார்).

"வேற்றுமையோடு இயைபில்லாத உவம வுருபு தொடர்ப் பொருட்கண் தொக்கவழி உவமத் தொகை ஆவதல்லது வேற்றுமைத் தொகை ஆண்டின்மையின்..." (சேனாவரையர்).

"உவமத் தொடர்மொழி ஒப்புமைப் பொருளே தந்து நிற்றலின் உவமத் தொகை......" (நச்சினார்க்கினியர்).

"பாலைப் போலும் மொழி பான்மொழி என உருபுத் தொகை யாகக் கொள்ளற்க, அஃதென்னையோ வெனின், ஈண்டு உவமை யான பாலோடு பொருளான மொழியைப் புணர்த்தலே கருத் தாகலின். பாலைப் போலு மொழி என்றவழிப் பால் கருமமாக அவ்வுருபிற்குப் போலும் என்பது பயனிலையாக அது மொழி என்னும் பெயர் கொள்ள உவமையோடு பொருட்குப் புணர்ச்சி யின்றாம் ஆகலின் என்க" (மயிலைநாதர்).

"புலிப்பாய்த்துள்...) புலிப் பாய்த்துளை ஒத்த பாய்த்துள், (புலிக்கொற்றன்...) புலியைப் போல் பாயுங் கொற்றன் என விரிதலால் இவை இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்றொக்க வேற்றுமைத் தொகையன்றோ, இவற்றை உவமைத் தொகை என்றது என்னெனின், செயப்படு பொருள் குறித்துக் கூறியவழி அத்தொகையாகவும் உவமைப் பொருள் குறித்துக் கூறிய வழி இத்தொகையாகவும் கொள்ளப்படும் என்க. (இராமாநுச கவிராயர்)

## iii. வினைத்தொகை

*"வினையின் தொகுதி காலத் தியலும்."* (தொல். 898)
*'காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை'* (நன். 363)

"ஈண்டுத் தொகுவதும் விரிவதும் பெயரெச்சம் என்று கொள்க. அது தொகுங் காலத்துக் காலப் பொருளை உணர்த்துஞ் சொல்லே தொகுவதும் விரிவதும் என்று கொள்க. சாத்தன் திரிதாடி உடையான். திரிதாடி— திரிந்ததாடி, திரிகின்றதாடி, திரியும் தாடி என முக்காலத்தும் விரியும்.

"கொல் யானை என்பது, அக்காலத்து அது உதிரக் கோட்டோடு வந்ததேல் இறப்பும் (கொன்ற யானை), அதன் தொழிலைக் கண்டு நின்றுழி நிகழ்வும் (கொல்கின்ற யானை), அது கொல்ல ஓடுவதனைக் கண்டுழி எதிர்வும் (கொல்லும் யானை) விரியும்" — நச்சினார்க்கினியர்.)

## iv. பண்புத் தொகை

*"வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின்என்*
*றன்ன பிறவும் அதன்குணம் நுதலி*
*இன்னது இதுஎன வரூஉம் இயற்கை*
*என்ன கிளவியும் பண்பின் தொகையே."* (தொல். 899)

*'பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்*
*ஒரு பொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை."*
(நன். 364)

கோச்சேரன் வெள்ளாடை வாங்கினன்—வெண்மை + ஆடை: வெண்மையாகிய ஆடை என விரியும். ஆகிய என்னும் பண்புருபு தொக்கது.

(க) "வண்ணம் பற்றித் தொக்கது கருங்குதிரை;
(உ) வடிவுபற்றித் தொக்கது வட்டப்பலகை;

(ங) அளவுபற்றித் தொக்கது குறுங்கோல்;

(ச) சுவைபற்றித் தொக்கது தீங்கரும்பு;

இனி 'என்ன கிளவியும்' என்றதனால் கேழற் பன்றி, வேழக் கரும்பு,... மாமரம் என இவையுங் கொள்க" (இளம்பூரணர்). "இனி... என்ன கிளவியும் என்றதனால் பண்பு பற்றி வருதலே யன்றிப் பெயரினால் ஒன்றை யொன்று விசேடித்து வந்து ஒட்டுப் படினும் பண்புத் தொகையாம் என்று கொள்க: வாணிகச் சாத்தன், சாரைப் பாம்பு, கேழற் பன்றி, வேழக் கரும்பு...என்றாற் போல... தம் பொருள் உணர்த்தும் பெயர் இரண்டு கூடி நின்று விசேடித்தலை உணர்த்தும் இரு பெயரொட்டுப் பண்புத் தொகையும் கொள்க." (நச்சினார்க்கினியர்)

## V. உம்மைத் தொகை

"இருபெயர் பலபெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
எண்ணின் பெயரொடு அவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே." (தொல். 900)

(1) இரு பெயர்க்கண்: உவாப் பதினான்கு: உவாவும் பதினான்கும் என விரியும்

(2) பல பெயர்க்கண்: புலிவிற்கெண்டை: புலியும் வில்லும் கெண்டையும் என விரியும்.

(3) அளவின் பெயர் பற்றி: தூணிப்பதக்கு: தூணியும் பதக்கும் என விரியும்.

(4) எண்ணியற் பெயர் பற்றி: பதினைவர்: பதின்மரும் ஐவரும் என விரியும்.

(5) நிறையின் பெயர் பற்றி: தொடியரை: தொடியும் அரையும் என விரியும்.

(6) எண்ணின் பெயர் பற்றி: பதினொன்று: பத்தும் ஒன்றும் என விரியும். (இளம்., சேனா., நச்சி.)

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41


"இருபெயராவது பொருட் பெயரும் தொழிற் பெயரும்... பல பெயராவது பன்மை குறித்த பெயர்... கபில பரணர் வந்தார்...... ஆடல்பாடல் தவிர்ந்தார்...... பார்ப்பார் சான்றோர் வந்தார் என வரும்...... ஏற்புழிக் கோடல் என்பதனால் எண்ணும்மையே ஈண்டுத் தொகுவது என்று கொள்க." (தெய்வச்சிலையார்)

"எண்ணின்கண் வரும் இடைச்சொல் பலவேனும் தொக்கு நிற்கும் ஆற்றலுடையது உம்மைப் பெயராகலான் உம்மைத் தொகை ஆயிற்று." (சேனாவரையர்).

*'எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்*
*எனுநான் களவையுள் உம்மிலது அத்தொகை.' (நன் 367)*

"கபிலபரணர்ப் பரவினான், என வருவழிக் கபிலனையும் பரணனையும் பரவினான், என வேற்றுமை யுருபும் உடன் விரிதலின் உம்மைத் தொகை என்றது என்னெனின், பரவினான் என்னும் வருமொழி நோக்கி வேற்றுமைத் தொகையாகவும், கபிலபரணர் என்னும் நிலைமொழி நோக்கி உம்மைத் தொகையாகவும் கொள்ளப் படும் என்க... எடுத்தல் முதலிய அளவைகள் இருப்ப எண்ணல் அளவையை முன்வைத்தது என்னெனின்,... எண்ண லளவை எனத் தனித்தும், எடுத்தல் முதலிய மூன்றினும் ஒரு துலாம், ஒரு கலம், ஒரு சாண் எனக் கலந்தும் நிற்றலால் முன்வைக்கப்பட்டது என்க. இனி ஆசிரியர் தொல்காப்பியனார், "இரு பெயர்......உம்மைத் தொகையே," என அறுவகையாற் கூறலின், இவர், (நன்னூலார்) 'நால்வகை அளவையுள் உம் இலது அத் தொகை,' என்றல் மாறுகொளக் கூறலன்றோ எனின், அவர் எண்ணல் அளவையை இருபெயர், பலபெயர், எண்ணியற் பெயர், எண்ணின் பெயர் என நான்காக வகுத்தும், முகத்த லளவை, நீட்ட லளவை என்னும் இரண்டையும் அளவின் பெயர் எனத் தொகுத்தும் கூற லால் அன்று என்க." (இராமாநுச கவிராயர்)

*பெயரி ளுகிய தொகையுமா ருளவே*
*அவ்வு மூரிய வப்பா லான*

என்னும் வேற்றுமையியல் (6-ம்) சூத்திரத்துக்குச் (சேனு வரையர் உரையைப் பின்பற்றிப் போலும்) சென்னை அரசு கையெழுத்துப் படி நூலகத்துப் பழையவுரை, "அன்றியுந் தொகையுமா ருளவே, என்றதனுல் அறுவகைப்பட்ட தொகைச் சொல்லும் எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கொள்ளும் என்க. உதாரணம்:—

(1) யானைக் கோடு கிடந்தது. (வேற்றுமைத் தொகை)
(2) மதிமுகம் வியர்த்தது. (உவமத் தொகை.)
(3) கொல்யானை நின்றது. (வினைத்தொகை.)
(4) கருங்குதிரை ஓடிற்று. (பண்புத் தொகை)
(5) உவாப் பதினுன்கு கழிந்தது. (உம்மைத் தொகை.)
(6) பொற்றொடி வந்தாள்," (அன்மொழித் தொகை) என வருகிறது.

## vi. அன்மொழித் தொகை

*வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே*
*வினையின் தொகையே பண்பின் தொகையே*
*உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்*
*றவ்வா றென்ப தொகைமொழி நிலையே. (தொல். 895)*

இச் சூத்திரத்தில், "அன்மொழித் தொகையைப் பின் வைத்தார் அஃது எல்லாவற்றையும் (மற்ற ஐந்து தொகைநிலைத் தொடர் மொழிகளையும்) பற்றிப் பிறக்கும் ஆகலான்" (இளம்பூரணர்).

*"ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி."*
(நன். 369)

எனவே அன்மொழித் தொகை ஐந்து வகைப்படும்:-

(1) வேற்றுமைத் தொகை நிலைக் களத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

(2) உவமத் தொகை நிலைக்களத்துத் தோன்றிய அன்மொழித் தொகை.

(3) வினைத் தொகை மேல் வந்த அன்மொழித் தொகை.

(4) பண்புத் தொகைநிலை பற்றிப் பிறந்த அன்மொழித் தொகை.

(5) உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

*பண்புதொக வரூஉங் கிளவி யானும்*
*உம்மை தொக்க பெயர்வயி னானும*
*வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்*
*ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே,*

எனத் தொல்காப்பியர் மூன்று வகை கூறுகிறார். ஆனால் ஐந்து வகையான தொகைநிலைத் தொடர் மொழிகளின் மேலும் அன்மொழித் தொகை பிறத்தல் தொல்காப்பியர் கருத்தாம் என்பதைத் தெய்வச்சிலையார் நீங்கலாக மற்ற உரையாசிரியர் பின் வருமாறு தெளிவிக்கின்றனர்:— "மற்றுத் தொகையதிகாரத்தில் (எச்சவியல் 16) முன் வைக்கப்பட்டதூஉம் சிறப்புடையதூஉம் வேற்றுமைத் தொகை யாகலின் ஈண்டு இதனை முற்கூறுது பண்புத் தொகையை முற்கூறியது என்னை யெனின், அதனால் பிறவும் உள கொள்ளபபடுவன; அவை யாவையோ எனின், ஒழிந்து நின்ற உவமத் தொகையும் வினைத் தொகையும் பற்றிப் பிறக்கும் அன்மொழித் தொகை என்பது". (இளம்பூரணர்),

"வேற்றுமைத் தொகைநிலைக் களத்துப் பிறத்தலின் உம்மைத் தொகைநிலைக் களத்துப் பிறத்தல் சிறுபான்மை ஆயினும், ஒரு பயன் நோக்கி அதனை அதன் முன் வைத்தார்; யாதோ பயன் எனின், சிறுபான்மை உவமத் தொகைநிலைக் களத்தும், வினைத் தொகைநிலைக் களத்தும் அன்மொழித் தொகை பிறக்கும் என்பது உணர்தத வென்க." (சேனாவரையர்)

"பெரும்பான்மை வரும் பண்புத் தொகைப் பின்னர் அங்ஙனம் வரும் வேற்றுமைத் தொகையை வையாது, முந்து மொழிந்ததன் தலைதடுமாற்றான் உவமத் தொகைக் கண்ணும், வினைத் தொகைக் கண்ணும் அன்மொழித் தொகை வருதல் கொள்க.

*வினையின் தொகையினும் உவமத் தொகையினும்*
*அன்மொழி தோன்றும் என்மனார் புலவர்*

என்பது அவிநயம்". (நச்சினார்க்கினியர்)

"ஆசிரியர் தொல்காப்பியனார்...... இம் முத்தொகை ஈற்றும் நின்றியலும் அன்மொழி எனக் கூறினார்,... அவர் எதிரது தழீஇ எண்ணிநின்ற எச்ச வும்மைகளால் உவமத் தொகை, வினைத் தொகை யீற்றும் நின்று இயலும் அன்மொழி எனத் தழீஇயினார்......

*'வேற்றுமை முதலிய ஐந்தொகை மொழியினும்*
*'ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே,'*

எனப் பிறர் கூறுதலுங் காண்க."—இராமாநுச கவிராயர்.

வேற்றுமை, உவமம், வினை, பண்பு, உம்மை உருபுகள் நிறுத்த மொழியிடத்துத் தொக்கு நிற்கப் பொருள் குறித்து வரும் பெயரின் ஈற்றில் வேறு மொழிகளும் தொக்கு நின்று இயல்வது அன்மொழித்தொகை நிலைத் தொடர் மொழியாகும்; இது அன்மொழித் தொகை எனச் சுருங்கக் கூறப்படும்.

## எடுத்துக்காட்டுகள்:

### i. இளம்பூரணர்

(க) பண்புத் தொகைப் புறத்துப் பிறந்தது வெள்ளாடை என்பது...

(உ) உம்மைத் தொகை பற்றிப் பிறந்தது தகர ஞாழல் என்பது. அது விரியுங்கால் தகரமும் ஞாழலும் (கலந்து செய்த சாந்து) என விரியும்.

(ங) வேற்றுமைத் தொகை பற்றிப் பிறந்தது பொற்றொடி என்பது. அத்தொகை பொன் மேலும் தொடிமேலுங் கிடவாது பொற்றொடி உடையாள் மேல் நிற்கும்.

(ச) உவமத் தொகை பற்றிப் பிறந்தது அறற் கூந்தல். அது விரியுங்கால் அறல் போலுங் கூந்தல் (உடையாள்) என விரியும்.

(ரு) வினைத் தொகை பற்றிப் பிறந்தது திரிதாடி என்பது... திரியின் மேலும் தாடியின் மேலுங் கிடவாது திரிந்த தாடி உடையான் மேல் நிற்கும்.

### ii. தெய்வச்சிலையார்

(க) ...கடுங்கோல் அதுவல்லதில்லை நிலக்குப் பொறை. கடுங்கோல என்பது (கடுமையாகிய கோலை உடையவன் என) அஃதுடைய அரசர்க்குப் பெயராகி வருதலின் அன்மொழித் தொகையாயிற்று... இது பண்பு பற்றி வந்தது.

(உ) தகரஞாழல் என்பது உம்மைத் தொகை. இவையிற்றை உறுப்பாக அமைக்கப்பட்ட சாந்தினையும் தகரஞாழல் என்பவாகலின்,

(தகரமும் ஞாழலும் சேர்த்து அமைத்த சாந்து எனப்பொருள் தந்து) அன்மொழித் தொகை ஆயிற்று... இது உம்மை பற்றி வந்தது.

தூணிப் பதக்கு என்றவழி, அளவிற்குப் பெயராதலின்றி அளக்கப்படும் பொருளுக்குத் தூணியும் பதக்குங் கொண்ட நெல் எனப் பெயராகியவழி அன்மொழித் தொகை யாம். இது உம்மை பற்றி வந்தது.

(ங) பொற்றொடி ஒன்பது வேற்றுமைத் தொகை: அதனை உடையாட்குப் பெய ராகியவழி அன் மொழித் தொகை யாம். (பொன்னா லாகிய தொடியை உடையவள்)

(ச) துடியிடைஎனவும், (ரு) தாழ்குழல் எனவும் உவமத்தொகைப் புறத்தும் வினைத் தொகைப் புறத்தும் அன்மொழித் தொகை வருமால்...... (செய்யுண் மருங்கினும்–தொல். சொல். இறுதிச் சூத்திரம்–என்பதனுரையில்) வினைத் தொகைப் புறத்தும், உவமத் தொகைப் புறத்தும், பொருள் ஒற்றுமைப்படாது அன்மொழித் தொகையாகிச் சான்றோர் செய்யுளகத்து வரின் இச்சூத்திரத் திடமாக அமைத்துக் கொள்க

## iii. சேனவரையர்

(க) வெள்ளாடை, அகரவீறு என்பன பண்புத் தொகை நிலைக் களத்துப் பிறந்த அன்மொழித் தொகை (வெண்மை யாகிய ஆடையை உடுத்தவள் எனவும், அகர மாகிய ஈற்றை உடைய சொல் எனவும் விரியும்.)

(உ) தகர ஞாழல் என்பது உம்மைத் தொகை நிலைக் களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. (தகரமும் ஞாழலும் கலந்து செய்த சாந்து என விரியும்.)

(௩) பொற்றொடி என்பது வேற்றுமைத் தொகை நிலைக் களத்துப் பிறந்த அன்மொழித்தொகை (பொன்னு லாகிய தொடியை அணிந்தவள் என விரியும்.)

(௪) பவளவாய் என்பது உவமத் தொகை நிலைக் களத்துப் பிறந்த அன்மொழித் தொகை; பவளம் போலும் வாயை உடையாள் என விரியும். (உடையாள்–குறிப்பு வினையாலணையும் பெயர்)

(௫) திரிதாடி வினைத்தொகை நிலைக் களத்துப் பிறத்தல்; திரிந்த தாடியை உடையான் என விரியும். (உடையான்–குறிப்பு வினையாலணையும் பெயர்)

(தொல். சொல். 84. 'வேற்றுமைப் பொருளை', என்ப தன் உரையில்:) தாழ் குழல், பொற்றொடி, மட்காரணம் என்னும் அன்மொழித் தொகைகளை விரிப்புழி தாழ்(ந்த) குழலை யுடையாள், பொன்(னலான) தொடியை அணிந் தாள், மண்ணாகிய காரணத்தால் இயன்றது என வரும். (உடையாள், அணிந்தாள், இயன்றது—வினையாலணையும் பெயர்கள்)

## iv. நச்சினார்க்கினியர்

(க) வெள்ளாடை (உ) தகர ஞாழல் (௩) பொற் றொடி எனவரும். ... உவமத் தொகைக் கண்ணும் வினைத்தொகைக் கண்ணும் அன்மொழித்தொகை ... (௪) அறற் கூந்தல், (௫) திரிதாடி என்பனவற்றை அறல் போலுங் கூந்தலை • டையாள், திரிந்த தாடியை உடையான் என விரிக்க. (உடையாள், உடை யான் – வினையாலணையும் பெயர்கள்)

(தொல். சொல். 84. 'வேற்றுமைப் பொருளை' என்ப தன் உரையில்:) தாழ்குழல், பொற்றொடி, மட்காரணம்

என்னும் அன்மொழித் தொகைகள், தாழ்குழலை உடையாள், பொற்றொடியை அணிந்தாள், மண்ணாகிய காரணத்தான் இயன்றது என விரிந்தவாறு காண்க. (உடையாள், அணிந்தாள், இயன்றது — வினையாலணையும் பெயர்கள்).

## V. சென்னை அரசு கையெழுத்துப் படி நூலகப் பழைய வுரை

(தொல். சொல். 84. 'வேற்றுமைப் பொருளை', என்பதன் உரையில்:) அன்மொழித் தொகை ஏனைத் தொகைகளின் இறுதியின் நின்றியறலின் ஈற்றின் நின்றியலும் என்றார் ... தாழ்குழல், பொற்றொடி, மட்காரணம் என்னும் அன்மொழித் தொகைகள் தாழ்குழலை யுடையாள், பொற்றொடியை அணிந்தாள், மண்ணாகிய காரணத்தான் இயன்றது என விரிந்தவாறுங் காண்க. (உடையாள், அணிந்தாள், இயன்றது – வினையாலணையும் பெயர்கள்.)

— ... தொகைபற்றி வந்த, ... தொகைக் கண் வந்த, ... தொகை மேல் வந்த, ... தொகை நிலைக் களத்துப் பிறந்த, ... தொகைப் புறத்துப் பிறந்த, எல்லாம் ஒக்கும்—

## VI. மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர் முதலியோர்

வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர் மொழிகட்கும் புறத்து, அவையல்லாத பிற மொழிகளாகிய உருபுகள் தொகுதல் அன்மொழித் தொகை யாம்.

(க) 1. பூங்குழல் பூவையுடைய குழலினை உடையாள், என விரியும். (2-ம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.)

2. பொற்றொடி பொன்னாலாகிய தொடியினை உடையாள், என விரியும். (3-ம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை).

"பொற்றொடி என்னும் அன்மொழித் தொகையில் பொன் என்பது அன்மொழித் தொகைப் பொருளை விசேடித்து நிற்ப அவ்விரண்டன் தொகையாற்றலால் அன்மொழித் தொகைப் பொருளை உணர்த்துமாறும் அறிக." — சிவஞானமுனிவர்.

3. கவி யிலக்கணம் கவிக்கு இலக்கணம் சொன்ன நூல் என விரியும். (4-ம் வேற்றுமைத் தொகைக்கண் வந்த அன்மொழித் தொகை.)

4. பொற்றாலி: பொன்னின் ஆகிய தாலியை உடையாள், என விரியும் (5-ம் வேற்றுமைத் தொகை பற்றி வந்த அன்மொழித் தொகை )

5. கிள்ளிகுடி கிள்ளியது குடி(கள்) இருக்கும் ஊர், என விரியும். (6-ம் வேற்றுமைத் தொகை நிலைக் களத்து வந்த அன்மொழித்தொகை)

6 கீழ்வயிற்றுக் கழலை கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலை போல்வான், என விரியும் (7-ம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை).

(௨) தாழ் குழல் தாழ்ந்த குழலினை உடையாள், என விரியும். (வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை).

(௩) கருங் குழல் கருமையாகிய குழலினை உடையாள் என விரியும் (பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை )

(௪) துடியிடை துடி யன்ன இடையினை உடையாள் என விரியும். (உவமத் தொகைப் புறத்து வந்த அன்மொழித் தொகை.)

## தொகை நிலைத் தொடர் மொழிகளில் பொருள் சிறக்கும் இடம்

*அவை தாம்,*

*முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்*
*இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்*
*அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்*
*அந்நான் கென்ப பொருணிலை மரபே. (தொல் 902)*

*முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி*
*எனும்நான் கிடத்தும் சிறக்கும் தொகைப்பொருள்.*
*(நன். 370)*

## அன்மொழித் தொகை நிலைத் தொடரில் பொருள் சிறக்கும் இடம்

i. **இளம்பூரணர்:** அம்மொழி நிலையாது அன்மொழிப் பொருள்பட நின்றன, முன் அன்மொழித் தொகைப்பட காட்டின வெல்லாம், என்பது. அவை வெள்ளாடை என்னுந் தொடக்கத்தன. (பக்கம் 11)

ii. **தெய்வச்சிலையார்:** பொற்றொடி வந்தாள் என்றவழிப் பொற்றொடியை அணிந்தாள்மேற் பொருள் நிற்றலின் அம்மொழி அல்லாத மொழிமேற் பொருள் நின்றது.

iii. **நச்சினார்க்கினியர்:** வெள்ளாடை என்புழித்தொக்க இரு மொழிமேலும் நில்லாது உடுத்தாள் என்னும் அன்மொழிமேல் நின்றது.

iv. **மயிலைநாதர்:** பொற்றொடி, துடியிடை, தகரசுரபி பெய்ம்முகில் என்பன அவற்றை உடையாரையும், ஒப்பாரையும் குறித்தமையின் புறமொழிமேல் நின்றன.

**V. இராமாநுசகவிராயர்:** பூங்குழல், தாழ்குழல் என்னுந் தொடக்கத்து அன்மொழித் தொகைகள் இந்த இரு மொழிக்கண்ணும் பொருள் சிறவாது, உடையாள் எனத் தொக்குநின்ற, அவற்றின் புற மொழிக்கண்ணே பொருள் சிறந்து நின்றன.

**VI. சங்கரநமச்சிவாயர்:** பூங்குழல், தாழ்குழல் என்றற் றொடக்கத்து அன்மொழித் தொகைகள் அனைத்து மொழிக்கண்ணும் பொருள் சிறப் பின்றி அனைத்து மொழிக்கும் புறமொழிக்கண் பொருள் சிறந்து நின்றன.

**VII. ஆறுமுக நாவலர்:** பூங்குழல், உயிர்மெய் என்றற் றொடக்கத்து அன்மொழித் தொகைகளிலே சொல்லுவோனுடைய கருத்து இவ்விரு மொழிப் பொருண் மேலது ஆகாது இவ்விரு மொழியும் அல்லாத உடையாள் முதலிய புறமொழிப் பொருண் மேலது, ஆதலால் அப்புற மொழிகளில் பொருள் சிறந்தன.

## எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய

(தொல். எச்சவியல் 24)

**1. இளம்பூரணர்:** அறுவகைத் தொகைச் சொல்லும் ..... பல சொன்மைப்படப் பொருளிசையா; ஒரு சொல் விழுக்காடுபடத் திரண் டிசைக்கும்.

**2. தெய்வச்சிலையார்:** யானைக் கோடு கிடந்தது; துடியிடை நன்று; கொல் யானை ஓடிற்று; கருங்குதிரை வந்தது; கழஞ்சரை நிறைந்தது; பொற்றொடி வந்தாள், என எழுவாய் ... ஆகியும், யானைக் கோட்டை, துடியிடையை ... என உருபேற்றும் ஒருசொல் நடைய ஆகி வந்தவாறு கண்டு கொள்க.

3. சேனவரையர்: ஒருசொல் நடைய, எனப் பொதுப் படக் கூறிய வதனுன், யானைக் கோடு, கொல் யானை என முன்மொழி (கோடு, யானை) பெய ராகியவழி ஒரு பெயர்ச்சொல் நடைய வாதலும், நிலங் கடந்தான், குன்றத் திருந்தான் என முன்மொழி (கடந்தான், இருந் தான்) வினை யாயவழி ஒரு வினைச்சொல் நடைய வாதலும் கொள்க. அவை உருபேற்றலும் பயனிலை கோடலும் ஆகிய பெயர்த் தன்மையும், பயனிலை யாதலும் பெயர் கோடலுமாகிய வினைத் தன்மையும் உடைய வாதலால் அவ்வச் சொல்லோடு கூட்டிக் கண்டு கொள்க.

4. இராமாநுசகவிராயர்: (நன். 'ஐந்தொகை,' என்பதன் உரையில்) எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய, எனக் கூறுதலால், இத் தொகைச் சொற்கள் விரவி வழக் கிடத்தும் செய்யு ளிடத்தும் ஒருசொல் நடையவாய் நின்று பயனிலை கொள்ளுதலும், 'மொழிந்த பொருளோ டொன்ற முடியாததனை முட்டின்று முடித்தல்,' என்பதனுற் கொள்க.

5. வைத்தியநாத தேசிகர்: (இலக்கண விளக்கம்.) "அன்மொழித் தொகை (யானது) வேற்றுமைத் தொகை முதலிய ஐவகை நிலைக்களங்களினும் பிறந்து, பொற்றொடி, பவளவாய், திரிதாடி, வெள்ளாடை, தகர ஞாழல் என ஒருசொல் நீர்மைத்தாய் பெயர்த் தன்மை எய்திப் 'பொற்றொடி தந்த புனைமடல்' எனப் பயனிலை யோடு புணர்ந்துழி எழுவாயாயும், 'சுடர்த் தொடீஇ கேளாய்' என முடிக்குஞ் சொல்லோடு புணர்ந்துழி விளியாயும்...... 'தகரஞாழல் பூசினுள்'; 'தகரஞாழலைப் பூசினுள்' என வேற்றுமை யுருபு தொக்கும் விரிந்தும் முடிக்குஞ் சொல்லோடு புணர்ந்துழி வேற்றுமைப் புணர்ச்சி ஆதலும்..."

# 19

## ஆகு பெயர்

*முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்*
*சினையிற் கூறும் முதலறி கிளவியும்*
*பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்*
*இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்*
*வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ*
*அனைமர பினவே ஆகுபெயர்க் கிளவி. (தொல். சொல். 110)*

*அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி*
*உளவென மொழிப உணர்ந்திசி னோரே.*
*(தொல். சொல். 113)*

*கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்*
*கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.*
*(தொல். சொல். 114)*

*பொருள்முதல் ஆறொடு அளவைசொல் தானி*
*கருவி காரியங் கருத்தன் ஆதியுள்*
*ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதை*
*தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. (நன். 290)*

1. ஆகுபெயர் என்ற பொருண்மை என்னை யெனின், ஒன்றன் பெயர் ஒன்றற்கு ஆய் நிற்றல் — இளம்பூரணர்.

2. ...யாதானும் ஓர் இயைபுபற்றி ஒன்றன் பெயர் ஒன்றற்கு ஆதல் — சேனாவரையர்.

3. ஆகுபெயர் என்பது ஒன்றன் பெயர் ஒன்றற்கு ஆய் நிற்றல். — சென்னை அரசு கையெழுத்துப் படி நூலகப் பழையவுரை.

4. ஆக்க வாகும் பெயர் ஆகுபெய ராயிற்று. — மயிலைநாதர்.

வருமாறு:—

(க) முதலிற் கூறுஞ் சினையறி கிளவி: சினைப் பொருளை முதலாற் கூறும் பெயர்ச் சொல் (தெய்வ): i. முத லாகுபெயர்: கடுத் தின்றான்; தெங்கு தின்றான்.

(உ) சினையிற் கூறும் முதலறி கிளவி: முதற் பொருளைச் சினையாற் கூறும் பெயர்ச் சொல் (தெய்வ): ii. சினை யாகுபெயர்: இலை நட்டார்; பூ நட்டார்.

(ங) பிறந்தவழிக் கூறல்: ஓரிடங் கூற அவ்விடத்து ஆயின பொருண்மையின் நிற்றல். (இளம்): iii. இடவாகு பெயர்: குழிப்பாடி நேரிது. (நேரிது — மெல்லிது). குழிப்பாடி என்னும் ஊரிற் பிறத்தலால் குழிப்பாடி என்று ஆடைக்குப் பெயராயிற்று.

(ச) பண்பு கொள் பெயர்: பண்பின் பெயரால் பண்புடையதனைக் கூறல் — (தெய்வ): iv. பண்பாகு பெயர்: நீலம் அணிந்தாள்.

(ரு) 1. இயன்றது மொழிதல்: v. தொழிலாகு பெயர்: எறி, குத்து, வெட்டு என்பன; அவை பட்ட விடத்தையும் வடு முதலியவற்றால் செய்கைப் பெயர வாகச் சொல்லுதல் — (அரசு.)

2. இயன்றதனால் மொழிதல்: vi. கருவியாகு பெயர்: தன்மேற் காட்டி, இஃதோர் அம்பு; இஃதோர் வேல், என்றவழி, அவை பட்ட வடுவை அவற்றிற்குக் காரணமாகிய கருவிப் பெயரான் வழுங்குவன—(தெய்வ)

3. இயன்றதனை மொழிதல்: vii. காரியவாகு பெயர்: நெல்லாதல் காணமாதல் ஒருவன் கொடுப்பக் கொண்டவன், இற்றைக்குச் சோறு பெற்றேன்,

என்றும்; அவ்வழிச், சோற்றுக்குக் காரணமாகிய நெல்லும் காணமும் சோறு, என ஆகு பெயராயின. — (தெய்வ.)

(சா) இருபெயராட்டாகு பெயர்: பக்கம் 28 காண்க,

(எ) வினைமுத லுரைக்குங் கிளவி: வினை செய்தான் பெயர் சொல்ல அவன் செய் பொருளை அறிய நிற்றல்: viii. கருத்தா வாகுபெயர்: சாலிகனால் (கோலிகனால், சேணிகனால்) நெய்யப்பட்ட ஆடையைச் சாலிகன், (கோலிகன், சேணிகன்) என்பது.

[“தொல்காப்பியம் என்பதோ, எனின், அஃது ஈறு திரிந்து நின்று, அவனாற் செய்யப்பட்டது என்னும் பொருளை விளக்குதலின் ஆகுபெயர் ஆகாது காரணப் பெயராம்” — தெய்வச்சிலையார்.

“தொல்காப்பினாலும் கபிலனாலுஞ் செய்யப்பட்ட நூலைத் தொல்காப்பியம், கபிலம் என்றல் வினைமுத லுரைக்குங் கிளவி என்றாரால் உரையாசிரியர், எனின், அற்றன்று... தொல்காப்பியன், கபிலன் என்னும் பெயர் இறுதி, இவனாற் செய்யப்பட்டது என்னும் பொருள் தோன்ற அம் என்பதோர் இடைச் சொல் வந்து அன்(ஈறு) கெடத் தொல்காப்பியம், கபிலம், என நின்றன, என்பது ஆசிரியர் கருத்தாம். அதனால் அவை உதாரண மாதல் உரையாசிரியர் கருத்தன்று என்க” — சேனா வரையர்.

“இனி, உரையாசிரியரும், நச்சினார்க்கினியரும் (தொல்காப்பியம்) இதனை ஆகுபெயர் என்றும் ஈறு திரியும் என்றும் கூறினாரால் எனின், அவர் ஆகுபெயர்ப் பெற்றி அறிந்திலர் போலும் என்க. ஆகுபெயர்கள் எல்லாம் நின்றாங்கு நின்று இயற்பெயர்ப் பொருளை

வேறுணர்த்தி நிற்கும் ஆற்ற லுடைய வாதலும், அகத்தியம், தொல்காப்பியம், கபிலம் என்பவற்றிற்கு அவ் வாற்றல் இன்மையும் ஓர்ந்து உணர்க." — சிவஞான முனிவர்.]

அளவும் நிறையும் அவற்ருெடு கொள்வழி:

(அ) அளவை யாகுபெயர்:

1. ix. எண்ணலளவை யாகுபெயர்: அரை, உடலி லுள்ள அவயவத்துக்காதல் (இராமா.)

2. x. முகத்தலளவை யாகுபெயர்: நாழி, உழக்கு— அளக்கப்பட்ட பொருட்கண் கிடந்த வரையறைக்கண் அப் பெயர் பொருட்காயிற்று. (கல்லா.)

3. xi. நீட்டலளவை யாகுபெயர்: கீழைத் தடி: தடி என்னும் நீட்டலளவைப் பெயர் அதனுல் அளக்கப்பட்ட விளைநிலத்துக் காயிற்று. (இராமா.)

(ஆ) 4. xii. நிறுத்த (–எடுத்த) லளவை யாகுபெயர்: கால், கழஞ்சு என்னும் நிறையையும் அதன் அளவாகிய கல்லையும் பொன்னையும் கால், கழஞ்சு என்ப. (தெய்வ.)

கிளந்த வல்ல வேறு பிற:

(ம) xiii. உவம வாகுபெயர்: பாவை, திரு என்பன 1. வடிவு பற்றியும் (வடிவுவமவாகுபெயர்), பசு, கழுதை என்பன 2. குணம்பற்றியும் (பண்புவமவாகுபெயர்), புலி, சிங்கம் என்பன 3. தொழில்பற்றியும் (வினையுவமவாகு பெயர்) ஒன்றன் பெயர் ஒன்றற்கு ஆகி வருவனவும் ஆகுபெயர் என்றே கொள்ளப்படும் — (தெய்வ.)

— "தாழ்குழல், திரிதாடி என்பனவற்றையும் இரு பெயரொட் டன்மையின் ஈண்டே கொள்க."—

(கல்லாடனர்).

xiv. காலவாகு பெயர்: *பகல் உச்சியடைந்தது: காலப்பெயர் அக்காலத்ததாகிய ஞாயிற்றுக்கு ஆதல்.*

அடையடுத்து வருவன :

"அறுபதம் முரலும், மருக்கொழுந்து நட்டான், வெற்றிலை நட்டான், என அடையடுத்து வந்த சினைப் பெயர், முதலுக்கு ஆயின...... திருவாசகம், திருவாய் மொழி என அடையடுத்து, வாசகம், மொழி என்னும் முதற் கருவியின் பெயர் அவற்றின் காரியமாகிய யாப் பிற்கு ஆயின"—சங்கரநமச்சிவாயப் புலவர்.

"திருவாசகம், திருவாய்மொழி என்பன உண்மையால் நோக்குவார்க்கு அன்மொழித்தொகை ஆவன." —
சிவஞான முனிவர்.

திருவாசகம், திருவாய்மொழி, திருக்குறள் என்பன வற்றில் திரு என்பதை உரிச்சொல் எனக்கொண்டால் தொகாநிலைத் தொடர்மொழியாய் நின்று அடையடுத்த ஆகுபெயர்ப் பொருளைத் தரும். அவை, திருவாகிய வாசகம், திருவாகிய வாய்மொழி, திருவாகிய குறள் என விரிந்து பண்புத் தொகையாகவோ, அல்லது, திருவை யுடைய வாசகம், திருவையுடைய வாய்மொழி, திருவை யுடைய குறள் என விரிந்து வேற்றுமைத் தொகை யாகவோ நின்று புறத்தும், வாசகத்தாலாய நூல், வாய் மொழியாலாய நூல், குறட்பாவாலாய நூல் என விரியின் அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழியாய் ஆகுபெயர்ப் பொருளைத் தரும்.

அவ்வாறே, அறுபதம், வெற்றிலை என்பன, ஆறு கிய பாதத்தை உடையது, வெறுமை யாகிய இலையை உடையது என விரியும் ஆதலின், பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைநிலைத்தொடர்

மொழிக ளாகும். அவை அறு பதம், வெறுமை இலே என்ற இயற்கைப் பொருளைத் தராமல் அவற்றை உடைய வண்டு, கொடி என, ஈற்றில் தொக்கு நின்ற புறமொழிப் பொருளை உணர்த்தி நிற்றலின் ஆகு பெயர், எனப்படுதல் முறையே யாகும்.

"தொன்று தொட்டு"

அம்மரபின என்பதற்கு 1. 'அவ் விலக்கணத்தன', என இளம்பூரணரும், 2. 'அத் தன்மை யாகிய மரபினை உடைய,' எனத் தெய்வச்சிலேயாரும், 3. 'அப் பெற்றிப் பட்ட இலக்கணத்தை உடையன,' எனச் சேனு வரையரும், நச்சினர்க்கினியரும், உரை கூறுகின்றனர். 4. "......என்றது, அவ்வாறு யாதேனும் ஓர் இயைபுபற்றி ஒன்றன் பெயர் ஒன்றற்கு ஆதல் என ஆகுபெயர் இலக்கணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு,' எனச் சேனு வரையர் விளக்கந் தருகிறுர்.

*அளந்த வல்ல வேறுபிற தோன்றினும்*
*அளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே*

என்ற ஆகுபெயர்ப் புறநடைச் சூத்திரத்திற்கு உரைகள் வருமாறு:—

1. மேற் சொல்லப்பட்டன வன்றி வரும் ஆகு பெயரும் உள; அவற்றையும் சொல்லப்பட்ட இலக்கணத் தான் உணர்ந்து கொள்க. — (இளம்.) 2. எடுத்து ஓதப் பட்ட வாய்பாட்டா னன்றி வேறு வருவனவும் எடுத் தோதிய நெறியினன் ஆகுபெயர் ஆமாறு அறிந்து கொள்க. —(தெய்வ.) 3. சொல்லபபட்டனவே யன்றிப் பிறவும் ஆகுபெயர் உளவேல் அவையெல்லாம் சொல்லப் பட்டவற் றியல்பான் உணர்ந்து கொள்க.—...இயைபு பற்றி ஒன்றன் பெயர் ஒன்றற்கு ஆங்கால் அவ்வியைபு ஓர் இலக்கணத்த தன்றி வேறுபட்ட இலக்கணத்தை

உடைத்து; அவ் விலக்கண மெல்லாம் கடைப்பிடித்து உணர்க என்பார், 'வேறு பிற தோன்றினும்,' என்றார்.— (சேனா.) 4. சொல்லப்பட்டனவே யன்றி வேறு பிற சொற் கண்ணே ஆகுபெயர்த் தன்மை தோன்றினும் சொல்லப் பட்டவற் றியல்பான் உணர்ந்து கொள்க. — (நச்சி.) 6. ஆகுபெயர்கள் மேல் எடுத்து ஓதின வல்லாதன வேறு பல தோன்றினும் அவ் வெடுத் தோதப்பட்ட வற்றின் இயல்பினானே உணர்ந்து கொள்க. (கல்லா.)

எனவே, நன்னூல் 290—ல் 'தொன்முறை உரைப் பன,' என்பதற்கு, அன்ன மரபின கிளந்தவற் றியலான் உணரப்படுவன; அதாவது, அப்பெற்றிப்பட்ட இலக்கணம் உடையனவாய் முன் எடுத்தோதப்பட்ட முறைப்படி ஆகு பெயர் ஆமாறு கூறப்படுவன, என்பதே சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வன்மை சிறந்த பவணந்தியார் கருத்தாகவேண்டும்.

அன்றித், "தொன்முறை உரைப்பன என்றமையான்... வழக்கின் கணணும் செய்யுட் கண்ணும் பயின்று... வருவனவன்றி இடையே தோன்றியவாறு ஆக்கப் படுவன அல்ல," (சங்கர—யர், இராமா—) எனபதில், இடையே தோன்றியவாறு ஆக்கப்படுவன வல்ல, என்பது பொருந்துமாறு இன்று.

ஆதலின், ஆகுபெயர் நியதிப்பெயராய் வருவன என்று விளக்கங் கூறுவது கொள்ளத்தக்க தன்று. அவை, பழை மையால் அங்ஙனம் தோன்றலாம். ஆகுபெயர்தாமோ என ஐயுறும் அளவுப் பழைமைப் பட்டனவும் உள :—(க) கடவுள் உள் விகுதி பெற்ற தொழிற்பெயர்; மனம் மொழி மெய் கடந்த பொருளுக்குப் பெயர் ஆகியது. (உ) பகல்—அல் விகுதித் தொழிற்பெயர்; நாளின் ஒரு பகுப்புக்குப் பெயர் ஆகியது. (ங) வீடு — முதல் திரிந்த தொழிற் பெயர்; துன்பங்களை விட்டு நீங்கியிருக்கும் இடத்திற்குப் பெயர்

ஆகியது. (௪) ஆதி — தி விகுதித் தொழிற் பெயர்; தொடக்கமாகும் நிலைக்குப் பெயர் ஆகியது. (௫) செய்— முதல்நிலைத் தொழிற்பெயர்; திருந்தச் செய்யப்பட்ட விளை நிலத்துக்குப் பெயர் ஆகியது.

மானே! தேனே! மயிலே! குயிலே! - நாயே! பேயே! (விரைந்துவா, - தொலைந்துபோ, எனத் தலைவன் தலைவியைப் பார்த்துக் கூறுகின்றான்.) - இவ் வுவம வாகுபெயர்களை நியதிப் பெயர் என்னலாமோ? தொன்றுதொட்டு வருவன என்னலாமோ?

அன்றியும் திரிசடை, மணிமேகலை, தேன்மொழி என வினைத் தொகைக்கண்ணும், வேற்றுமைத் தொகைக் கண்ணும், உவமத் தொகைக்கண்ணும் பிறந்த அன் மொழித் தொகைகள் இயற்பெயராகி நிற்கின்றனவே!

ஆகவே, நியதிப் பெயராய் மாறி வழங்கி வரும் ஆகுபெயர்களையும் அன்மொழித் தொகைகளையும் இயற் பெயர்களாக ஒதுக்கிவிடுவது முறையாகும்: கடவுள், வீடு, பகல், ஆதி, செய், திரிசடை, மணிமேகலை போன்றன அத்தகையனவாம். புகையிலை, வெற்றிலை, மருக்கொழுந்து போன்றவற்றையும் அவற்றுட்படுத்தலாம். — [சொல் லிலக்கணங் காண்பார் அவற்றைக் காரணப் பெயர் என்பர். சொல் வரலாறு காண்பார் அவை பண்டு ஆகு பெயராய், அன்மொழித் தொகையாய் நின்றன என்பர்.]

பெயரினாகிய தொகையுமா ருளவே
அவ்வு முரிய வப்பா லான. (தொல். சொல். 68)

"அறுவகைத் தொகைப் பெயரும் எழுவாயாய்ப் பயனிலை கொள்ளும்" என முந்திய சூத்திரத்தோடு இயைய இச் சூத்திரத்துக்குத் தெய்வச்சிலையார் நீங்கலாக மற்ற உரை யாசிரியர் எல்லாம் பொருள்கொண்டு ஒரே வகையான எடுத்துக்காட்டுந் தருகின்றனர் :—

1. யானைக் கோடு கிடந்தது. (வேற்றுமைத்தொகை)
2. மதிமுகம் வியர்த்தது. (உவமத்தொகை)
3. கொல்யானை நின்றது. (வினைத்தொகை)
4. கருங்குதிரை ஓடியது. (பண்புத்தொகை)
5. உவாப்பதினான்கு கழிந்தன. (உம்மைத்தொகை)
6. பொற்றொடி வந்தாள். (அன்மொழித்தொகை)

இத் தொகைநிலைத் தொடர்மொழிகள் பெயர்த் தன்மைப்பட்டு எழுவாயாய் நிற்கும், எனவே, எல்லா வேற்றுமைகளையும் ஏற்கும் என்பது கூறாதே அமையும்.

ஆகவே, அன்மொழித்தொகைகள் எல்லாம் எட்டு வேற்றுமைகளையும் பெற்று வரும்:—

i. பூங்குழல் (-பூங்குழலை உடையாள்) வந்தாள். — முதல் வேற்றுமை.

ii. கவியிலக்கணத்தை (-கவியிலக்கண நூலை) வாங்கினேன் — 2-ம் வேற்றுமை.

iii. குன்றக்கூகையால் (-குன்றக்கூகை போன்றவளால்) விளைந்த துன்பம் — 3-ம் வேற்றுமை.

iv. மழைவண்கைக்கு (-மழை வண்கை உடையார்க்கு) மகனாவான் — 4-ம் வேற்றுமை.

v. முத்தமுறுவலின் (-முத்தமுறுவல் உடையவளின்) நல்லளோ — 5-ம் வேற்றுமை.

vi. திரிதாடியது (-திரிதாடி உடையானது) தோற்றம் — 6-ம் வேற்றுமை.

vii. வட்டப்பலகையின்கண் (-வட்டப்பலகை கொண்ட தன்கண்) உள்ளது — 7-ம வேற்றுமை.

viii. தீங்கரும்பே (-தீங்கரும்பு போன்றவளே) கேளாய் — 8-ம் வேற்றுமை.

எனவே, அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழி ஒருசொல் நடையவாய் பெயர்த் தன்மைப்பட்டு எல்லா வேற்றுமைகளையும் பெற்று, நின்ற இரு மொழி மேலும் பொருள் நில்லாமல் அல்லாத புறமொழியில் பொருள் நின்றன. — இயற்பெயர் ஆகுபெயர் என்ற இரண்டு வகையுள் எதனுள் இவற்றை அடக்குவது?

## இருபெயரொட் டாகுபெயர்

(க) இளம்பூரணர்: இருபெய ரொட்டு என்பது, இரண்டு பெயர் ஒட்டி நிற்பது; அது சொல்லப் பிறிது பொருள் விளங்கும். அது வருமாறு: பொற்றொடி என்பது இருபெயர் நின்று ஒட்டிற்று; அது சொல்லப் பொற்றொடி தொட்டாளை விளக்கும்.

(உ) தெய்வச்சிலையார்: இருபெயரொட்டு என்பது இரண்டு பெயர் தொக்கு ஒருசொல் நீர்மைப்பட்டு மற்றொரு பொருள் தரு பெயர் ஆகி வருவது. அது துடியிடை என்பது; துடி போன்ற இடையினை உடையாளைத் துடியிடை என்ப, ஆகலின் ஆகுபெயர் ஆயிற்று.

(ங) சேனாவரையர்: அன்மொழிப் பொருண்மேல் நின்ற இருபெய ரொட்டு...... பொற்றொடி வந்தாள் என இருபெயரொட்டு...... அன்மொழிப் பொருண் மேலும் வந்தவாறு கண்டு கொள்க.

(ச) கல்லாடனர்: இருபெயரொட்டு பொற்றொடி எனபது.

(ரு) சென்னை அரசுக் கை-நூலகர் பவானந்தனார்: இருபெய ரொட்டு பொற்றொடி, பொன்னும் தொடியு மாகிய இரண்டு மல்லாது, அத் தொடியாளை விளக்கு மாதலின்.

(சூ) நச்சினார்க்கினியர், "அன்மொழிப் பொருண்மேல் நில்லாத இருபெய ரொட்டு," எனச் சேனாவரையர் உரையை நேரே எதிர்த்துக் கூறியும். தெய்வச்சிலையார் நீங்கலாக மற்ற நால்வரும் இருபெயரொட் டாகு பெயர்க்குக் காட்டும் உதாரணம்பற்றி, "பொற்றொடி என்பது அன்மொழி; ஆகுபெய ரன்மை உணர்க," என மறுப்புரைத்தும் செல்கிறார்.

இவர் கருத்து தெய்வச்சிலையாரது கருத்தை ஒத்த தென்பது, 'பண்புதொக வரூஉம்,' என்னும் எச்சவியற் சூத்திரத்துக்கு அவர் கூறும் உரை விளக்கங்களாற் புலப் படும்:— "பொற்றொடி என்பது வேற்றுமைத் தொகை; அதனை யுடையாட்குப் பெயராகியவழி அன்மொழித் தொகை யாம். ஈண்டுத் தொடிக்கு அடையாகி நின்ற பொன் தொடியை யுடையாளது செல்வத்தைக் காட்டு தலின் இவ்விரண்டு சொல்லும் அதனை யுடையாளைக் குறித்தவாறும் அறிந்துகொள்க...... துடியிடை எனவும், தாழ்குழல் எனவும் உவமத்தொகைப் புறத்தும் வினைத் தொகைப் புறத்தும் அன்மொழித் தொகை வருமால் எனின், துடி என்பதூஉம், தாழ் என்பதூஉம், இடை, குழல் என்பவற்றிற்கு அடையாகி வரினல்லது, அவற்றை உடையாட்குப் பெயராகுங்கால், இறுதிநின்ற பெயர்ப் பொருண்மை வந்து, ஏனைய வாராமையின் ஆகுபெயர் எனினல்லது அன்மொழித்தொகை ஆகாது எனக்கொள்க. அதனானே யன்றே, இருபெய ரொட்டும், என ஆகுபெயர்க்கண் எடுத்து ஓதுவாராயினர், என உணர்க," என விளக்கம் வருவது காண்க.

இதனாலேயே, "துடி போன்ற இடையினை உடையாளைத் துடியிடை என்ப, ஆகலின் ஆகுபெயர் ஆயிற்று," என்றதும்.

ஆனால், இதனைத் தொடர்ந்து, "இது உவமத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையன்றோ, எனின், ஆகுபெயராவது ஒட்டுப்பட்ட பொருளோடு ஒற்றுமைப்பட்டு வரும்; அன்மொழித் தொகையாவது அப் பொருளின் வேறுபட்டு வரும். அன்ன தாதல் அன்மொழித்தொகை என்றதனாலும் விளங்கும்," என்று விளம்பிய விரிவுரையே அன்றுதொட்டு இன்றுகாறும் ஆகுபெயர், அன்மொழித்தொகை பற்றிய கருத்து அறிஞரிடையே தெளிவுபடாமல் நிற்றற்கு அடிப்படையான காரணமாகும் என்னலாம். அது மேற்பட நன்கு வளர்வதற்குக் காரணம் உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர், சேனாவரையரை எதிர்த்துக் கூறிய மறுப்புரையாகும், என்னலாம்.

இருபெயரொட் டாகுபெயர்க்கு நச்சினார்க்கினியர் கொண்ட எடுத்துக்காட்டு மக்கட் சுட்டு என்பது — "மக்கட் சுட்டு என இரண்டும் அல்லாததோர் பொருளை உணர்த்தாது மக்களை உணர்த்திற்று, நன்கு மதிக்கும் பொருள் மக்களே யாதலின்."

மக்கட்சுட்டு பற்றிய பல வேறுபட்ட விளக்கம், விளக்கச் சூறாவளிகள் வருமாறு :—

## மக்கட் சுட்டு

### உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

*1. இளம்பூரணர்: மக்களென்று சுட்டப்படும் பொருளை என்றவாறு... இனி, மக்கட் சுட்டே, என்பது மக்கள் என்று வரைந்து சுட்டுதற்குக் காரணமாகிய தன்மை, என்னும் ஒருவன்.*

*இனி, மக்கள் எனினும் சுட்டு எனினும் அவரையே சொல்லியவாறு என்ப ஒருதிறத்தார். சுட்டு என்பது கருத்து; அக்கருதற்பாடு உடைமையின் சுட்டு எனவும்படும் மக்கள் என்பது.*

2. தெய்வச்சிலையார்: மக்கள் என்பது, மக்கள் என்னும் பொதுப் பொருண்மை. சுட்டு என்பது குறிப்பு: இனச்சுட்டில்லா (தொல். 501) எனவும், தெய்வஞ் சுட்டிய (தொல். 487) எனவும் ஓதினார் ஆகலின். அது சுட்டப் படும் பொருண் மேல் ஆகுபெயராய் நின்றது... உலகத்துப் பொருள் எல்லாவற்றினும் மக்கள் என்று சுட்டப்படும் பொருளை... மக்கள் என்னாது சுட்டு என்றது என்னை யெனின், மக்களாவார் ஒரு நீர்மைய ரன்றி, ஆணும் பெண்ணும் அலியு மாகிய வடிவு வேற்றுமை உடையவர் ஆகலின், அவர் எல்லார் மாட்டும் பொதுவாகக் கிடக்கும் மக்கள் தன்மையைக் குறித்து, மக்களிவர் என்னும் பொதுப் பொருண்மை உயர்திணை யாவது என்பது அறிவித்தற்குச் சுட்டு என்றார்.

3. சேனாவரையர்: மக்களென்று கருதப்படும் பொருளை...

மக்களாகிய சுட்டு மக்கள் சுட்டு, எனப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஈண்டு, மக்கள் என்றது மக்களென்னும் உணர்வை. எனவே, மக்களை யாயினும், மக்கள் என்று சுட்டாது பொருள் என்று சுட்டியவழி உயர்திணை எனப்படாது, என்பதாம்.

'அஃறிணை என்மனார் அவரல பிறவே', என்புழி அஃறிணையாய் அடங்கி உயர்திணை முடிபு எய்தாமையின், அவையும் விலக்கற்பாட்டிற்கு ஏலா, எனின், அற்றன்று; மக்கட் சுட்டு உடைமையான் அவை உயர்திணையே யாம், என்பது. யாதோ மக்கட் சுட்டு உடையவாறு எனின், அறஞ் செய்து துறக்கம் புக்கான், எனவும், உயிர்நீத்து ஒருமகன் கிடந்தான், எனவும், உயிரும், உடம்பும் அவரின் வேறன்றி அவராக உணரப்பட்டு உயர்திணைக்கு ஏற்ற முடிவுகொண்டு நிற்றலின் மக்கட் சுட்டு உடைய, என்பது (தொல். சொல். 57 உரை)

4. நச்சினார்க்கினியர்: மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருளை...மக்கட் சுட்டு என்பது மக்களாகிய சுட்டு என இருபெயரொட்டுப் பண்புத் தொகை. சுட்டு நன்கு மதிப்பு; அஃது ஆகுபெயராய் மக்கட் பொருளை உணர்த்தி நின்றது.

சேனாவரையர் இதனை பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்றாரேலோ எனின், இருபெயரொட் டாகு பெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் வேறுபாடு உணராமல் கூறினமையின் அது பொருந்தாது. என்னை வேறு பாடு எனின் ஈண்டு ஆகுபெயராய் நின்ற நன்கு மதிக்கும் பொருளும் மக்களையே உணர்த்தி நிற்கும்.

இனி, சேனாவரையர் மக்கட் சுட்டு என்பதற்கு மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும் அது மக்கட் சுட்டு என்றும், ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே, என்பதற்குச் சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாதலின், ஆயிரு திணையின்கண், என ஏழாவது விரிக்க என்றும், பொருள் கூறினால் எனின், முன்னர் மக்கள் என்று கருதப்படும் பொருளை உயர்திணை என்ப. என்று அவர் கண்ணழிவு கூறியது, ஒரு பொருளிடத்து நின்ற மக்கட் டன்மையாலே ஒருவற்கு அப்பொருள் மக்கள் என்று கருதப்பட்டது என்று பொருள் தந்து நின்றது, பின்னர், மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும், என்றது. நோக்குகின்றவர்க்கு மக்களாகிய கருத்து யாதொரு பொருளி டத்துத் தோன்றும். என்று பொருள் தந்தால்,அக்கருத்து மக்கள் ஆகாமையின் பண்புத் தொகை அன்றாம். அது மக்கட் சுட்டு என்றதற்கு, அப்பொருள் மக்கட் சுட்டு, என்று அவர் கூறிய பொருளானும் மக்களையே தோற்றுவித்து நிற்றலின்; அன் மொழித் தொகை அன்றாம். அன்றியும். ஆசிரியர் ஈண்டு ஒரு பொருள் நின்று தன்னை ஒருவற்கு உணர்த்துமாறும் ஒருவன் அதனை உணருமாறும் ஆராய்கின்றாரல்லர். உயர்ந்த ஒழுக்கம் என்று முதனூல் ஆசிரியர் கூறிய குறி உலகத்தார்க்கு விளங்கப் பொருள் கூறக் கருதி. அதன் பயன் எய்துவிப்பத் தாமும், மக்களாகிய நன்கு மதிக்கும் பொருள். என்று அச்சொற்குப் பொருள் கூறினார், என் றுணர்க.

(முதலிற் கூறும், என்பதன் உரையில் இருபெயரொட்டாகு பெயர்க்கு எடுத்துக்காட்டாக:) மக்கட் சுட்டு என. இரண்டும் அல்லாத தோர் பொருளை உணர்த்தாது மக்களை உணர்த்திற்று, நன்கு மதிக்கப்படும் பொருள் மக்களே ஆதலின்.

5. கல்லாடனார்: மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருளை...... மக்கட் சுட்டு என்பது மக்களாகிய சுட்டு என இருபெய ரொட்டுப் பண்புத் தொகை. சுட்டு என்பதன் பொருள் நன்கு மதிப்பு. அஃது ஆகுபெயரான் மக்கண்மேல் நின்றது. மக்கள் என்னாது சுட்டு என்பது தான் உயர்திணை என இடுகின்ற குறியீட்டுக்குக் காரணம் இது, என்பது விளக்கல் வேண்டிப்போலும்.

6. சிவஞானமுனிவர் (இராமாநுச கவிராயரும்): இரு பெயரொட் டாகுபெயர் இருமொழிக்கண் வந்ததன்றோ, எனின் அன்று, என்னை? வகரக் கிளவி,...... மக்கட் சுட்டு என்னும் இருபெயரொட் டாருபெயருள் வகரமும்,........ மக்களுமாகிய அடைமொழிகள் கிளவி, சுட்டு என்னும் இயற்பெயர்ப் பொருளை விசேடித்து நில்லாது எழுத்தும்,...... பொருளு மாகிய ஆகுபெயர்ப் பொருளை விசேடித்து நிற்பக் கிளவி, சுட்டு என்பனவே ஆகுபெயர்ப் பொருளை உணர்த்த இரு பெயரும் ஒட்டிநிற்கு மாகலின்.

7. இலக்கண விளக்கம்: மக்கட்சுட்டு என்றவழி, மக்களாகிய சுட்டு மக்கட் சுட்டு. சுட்டு நன்கு மதிப்பு: அஃது ஆகுபெயராய் மக்கட் பொருளை உணர்த்தும். உணர்த்தவே, மக்கட் சுட்டு என்பது பிறிது பொருள் உணர்த்தாது அம் மக்களையே உணர்த்தி நிற்றலானும், பொற்றொடி என்பது, பொன்னுந் தொடியு மன்றி, அணிந்தாள், எனப் பிறிது பொருள் உணர்த்தி நிற்றலானும்; இருபெயரொட் டாகு பெயரும் வேறே, அன்மொழித் தொகையும் வேறே, எனக் கொண்டு, ஈண்டு மக்கட் சுட்டு என்பதனை இருபெயரொட் டாகுபெயர்க்கு உதாரணமாக்கி, ஆண்டுப் பொற்றொடி என்பதனை அன்மொழித் தொகைக்கு உதாரணமாக்கினா ரும் இழுக்கு என்னை யெனின், மக்கட் சுட்டே இருபெயரொட் டாகு பெயராய், அச் சுட்டு மக்களை உணர்த்திற்றேல், மக்க ளாகிய மக்கள் என்று வருவதல்லது, ஒன்றை யொன்று விசேடித்து இன்னது இதுவென வாராமையின், மக்கட் சுட்டே இருபெயர் ஒட்டு ஆகாமையின், மக்கட் சுட்டே இருபெயரொட் டாகு பெயர் ஆமாறு யாண்டையது, என்பதாம். (சூ. 192 உரை: திருவாரூர் வைத்தியநாத தேசிகர்.)

8. *இலக்கண விளக்கச் சூறாவளி :* மக்கட் சுட்டு 'மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருள் என்றக்கால், நன்கு மதிக்கப்படும் பொருளும் மக்களே ஆகலின், மக்களாகிய மக்கள் என வருவதல்லது, இன்னது இது வென வாராமையின், மக்கட் சுட்டே இருபெயர் ஒட்டு ஆகாது; என்றார். உலகத்துப்பொருளை எல்லாம் உயர்திணைப் பொருள் அஃறிணைப் பொருள் என இரண்டாகப் பகுத்துக் கொண்டதற்கு ஏற்ப, மக்கள் என்பது, பொருள் என்னும் பொதுமையின் நீக்கி, உயர்திணைப் பொருளை விசேடித்து நிற்பச் சுட்டு என்பது ஆகுபெயராய் அப்பொருளின் உயர்ச்சி தோன்றச் சிறப்பித்து நிற்ப, இன்னது இது வென ஒன்றனை யொன்று விசேடித்து இருபெயரும் ஒட்டி வருதலான் இருபெயரொட்டு ஆகாமை யாண்டையது, என மறுக்க.

9. *ஆறுமுக நாவலர் :* வகரக் கிளவி, மக்கட் சுட்டு என்பன ஒரு பொருட்கு இருபெயர் ஒட்டி நிற்க, அவற்றுள் ஒரு பெயர் ஆகுபெயராக நிற்றலால் இருபெயரொட் டாகு பெயர்...... மக்கட் சுட்டு என்பது, சுட்டென்பது நன்கு மதிப்பை உணர்த்தும்போது இயற்பெயர்; நன்கு மதிக்கப்படுதலை யுடைய பொருளை உணர்த்தும்போது ஆகுபெயர். மக்கட் சுட்டு மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருள் எனப் பொருள்படும். (நன். 290 உரை)

## இருபெயரொட் டாகுபெயர் ஆதலும் ஆகாமையும்

இருபெயர் ஒட்டி, நிலைமொழியானது வருமொழியாகிய இயற்பெயருக்கு அடையாகி, அவ்விரு மொழிகளும் அல்லாத புறமொழியில் பொருள் சிறந்து நிற்க, இங்ஙனம் இவ்விரு பெயரும் இயைபுடைய மற்றொன்றற்கு ஆகி வருதலின் இருபெயரொட் டாகுபெயராம்.

கொல்லிப்பாவை போனுள்: — கொல்லி மலையிலுள்ள பாவை போன்றவள்: கொல்லி, பாவை என்ற இரு பெயரும் போன்றவளுக்கு ஆகிவருதலின், இரு பெயரொட் டாகுபெயர்.

மரப்பாவை தோற்ருள். — மரத்தாலாகிய பாவை போன்றவள்: மரம், பாவை என்ற இரு பெயரும், போன்றவளுக்கு ஆகிவருதலின், இருபெயரொட் டாகு பெயர்.

அன்றி, குலப்பாவை தேறினுள். — குலத்திற் பிறந்த பாவை போன்றவள் என்பதில் பாவை, உவமவாகு பெயர்; குலம் என்பது பாவை யென்னும் இயற் பெயருக்கு அடையாகாமல், (பாவை) போன்றவள் என்னும் ஆகுபெயருக்கு அடையாகி வருதலின், குலப் பாவை இருபெயரொட் டாகுபெயர் ஆகாது.

வேற்காளை வென்ருன் — வேலையுடைய காளை போன்றவன் என்பதில் காளை உவமவாகு பெயர்; வேல் என்பது காளை யென்னும் இயற்பெயருக்கு அடையாகாமல், (காளை) போன்றவன் என்னும் ஆகுபெயருக்கு அடையாகி வருதலின் இருபெயரொட் டாகுபெயர் ஆகாது.

குறவஞ்சி பாடினுள். — (குறம் – குறக்குலம்; அல்லது, குறத் தொழில். வஞ்சி – கொடி; வள்ளி.) குறத்திலுள்ள (அல்லது குறத்தையுடைய) வஞ்சி போன்றவள் என்பதில் வஞ்சி, உவமவாகு பெயர்; குறம் என்பது, வஞ்சி யென்னும் இயற்பெயருக்கு அடையாகாமல், (வஞ்சி) போன்றவள் என்னும் ஆகுபெயருக்கு அடையாகி வருதலின் இருபெயரொட் டாகுபெயர் ஆகாது.

கொல்லிப்பாவை, மரப்பாவை என்பன சொல் லிலக்கண வகையால் இருபெயரொட் டாகுபெயர். அவை கொல்லியிலுள்ள பாவை போன்றவள் எனவும் மரத்தாலாகிய பாவை போன்றவள் எனவும் விரிதலின், தொடரிலக்கண வகையால் (முறையே 7-ம், 3-ம்) வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழிகளாகும்.

குலப்பாவை, வேற்காளை, குறவஞ்சி என்பவற்றில் பாவை, காளை, வஞ்சி என்ற தனிமொழிகளே ஆகுபெயராய் நிற்க, குலம், வேல், குறம் என்பன ஆகுபெயர்ப் பொருளுக்கு அடையாகி, அத் தொடர்மொழிகள் குலத்திலுள்ள பாவை, வேலையுடைய காளை, குறத்திலுள்ள வஞ்சி என விரிதலின் (முறையே 7-ம், 2-ப், 7-ம்) வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் மொழிகள் ஆகும்.

ஆகவே, பின்வருமாறு காண்க:

i. *மக்கட்சுட்டு என்பதில் சுட்டு நன்கு மதிப்புடைய பொருளுக்கு ஆகுபெயர் எனின், மக்கட் சுட்டு மக்களாகிய சுட்டு என விரிந்து, சாரைப் பாம்பு, கேழற் பன்றி, வேழக் கரும்பு என்பன போல இருபெயரொட்டுப் பண்புத் தொகையாம். மக்கள் என்பது, குலப்பாவை, வேற்காளை என்பவற்றிற் குலம், வேல் என்பன போல ஆகுபெயர்ப் பொருளுக்கு அடையாகி நிற்றலின் மக்கட் சுட்டு இருபெயரொட் டாகுபெயராகாது. அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழியு மாகாது.*

ii. *மக்கட்சுட்டு என்பதில் மக்கள் மக்கட்டன்மை. அது மக்கள் (தன்மை) ஆகிய சுட்டுதல் உடைய பொருள், என விரிந்து, தொகையாற்றலால் புறமொழிப் பொருளை உணர்த்தி நிற்பின் இருபெயரொட் டாகுபெயராம். இருபெயரொட்டுப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையுமாம்.*

iii. *மக்கட்சுட்டு என்பதில் சுட்டு என்பதும் ஆகு பெயராய், மக்கள் எனப் பொருள் உணர்த்தும் எனக் கொண்டால் மீமிசைச் சொல் எனக் கொள்ளவேண்டும்.*

iv. *மக்கட்சுட்டு என்பது, மக்களைச் சுட்டு(தல்) உடைய மொழி என விரிந்து, மக்கள் மேலும் சுட்டு மேலும் பொருள் நில்லாது, உடைய மொழி என்பதன்மேல் பொருள் நின்றால் இருபெயரொட் டாகுபெயர். அத் தொடரில் ஐ உருபு தொகுதலினாலும் அதன் புறத்து, உடைய மொழி, என்னும் அன் மொழியுந் தொகுதலினாலும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழி.*

## ஓசை வேறுபாடு

1. **இளம்பூரணர்:** பண்புத் தொகைப் புறத்துப் பிறந்தது வெள்ளாடை என்பது. அதனைப் படுத்த லோசையாற் சொல்ல... அந் நிறைமொழி ஓசையன்றிப் பிறி தோர் மொழி ஓசைபட்டுப் பொருள் கொள்ளு மாகலான், அம் மொழி அன்மொழி யாயிற்று. உம்மைத் தொகைபற்றிப் பிறத்தது தகர ஞாழல் என்பது ... அன்னதன் தொகைக்கண் ஓசை வேறுபடச் சொல்ல ... — வேற்றுமைத் தொகைபற்றிப் பிறந்தது பொற்றாலி என்பது ... அத் தொகை, பொன்மேலுந் தாலிமேலுங் கிடவாது, பொற்றாலி யுடையவள் மேல் நிற்கும், ஓசை வேறுபாட்டான் என்பது.

2. **சேனாவரையர்:** இறுதிச் சொல் படுத்த லோசையாற் பொருள் விளக்குமாறு வழக்கி னுள்ளுஞ் செய்யுளுள்ளுங் கண்டு கொள்க.

3. **நச்சினார்க்கினியர்:** இறுதிச் சொற்கண் எழுந்து, படுத்தல் ஓசையான் அத் தொகைச் சொல் தோன்றிப் பொருள் விளக்குதலின், 'ஈற்று நின் றியலும்,' என்றார். வெள்ளாடை, தகர ஞாழல், பொற்றொடி என வரும். இவை, வெள்ளாடை யுடுத்தாள், தகர ஞாழல்

அணிந்தாள், பொற்றொடி தொட்டாள், என இறுதிச் சொற்கண் எழுந்து படுத்தல் ஓசையால் தொகை தோன்றியவாறு காண்க.

4. கல்லாடனர்: இரு பெயரொட்டு பொற்றொடி என்பது. இஃது அன்மொழித் தொகையன்றோ எனின், படுத்தலோசை பட்டவழி அன்மொழித் தொகை யாம்; எடுத்தலோசை பட்டவழி, ஈண்டு, ஆகுபெயராம், என்பது.

i. கண்ணகி பொற்றொடி மகிழாள்.

ii. கோவலன் பொற்றொடி கண்டு கேட்டு மகிழ்ந்தான்.

இவற்றுள், i-ம் வாக்கியத்தில் பொற்றொடி என்பது, பொனனாலாகிய தொடி என்னும் அணிகலன், எனப் பொருள்படும். ii-ம் வாக்கியத்தில் பொற்றொடி என்பது, பொன்னாலாகிய தொடி அணிந்தவளாகிய மாதவி, எனப் பொருள்படும். எனவே, i-ம் வாக்கியத்தில் பொற்றொடி, வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்மொழி; இயற் பெயர்ப் பொருளே உணர்த்தி நின்றது. ii-ம் வாக்கி யத்தில் பொற்றொடி, வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழி; எனவே, அது இயற்பெயர்ப் பொரு ளுணர்த்தாமல், மாதவி என, ஆகுபெயர்ப் பொருள் உணர்த்தியது. பொன் என்ற பெயர், தொடி என்ற பெயர்க்கு அடையாகி, இரண்டும் ஒட்டி நிற்றலின் இருபெயரொட் டாகுபெயர் எனப்படும்.

அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழியாய் நிற்கும் ஒரு சொற்றொடர், சொல்லிலக்கண முறையால் இருபெயரொட் டாகுபெயர் எனப் பெயர் பெறுதல் ஏது வாகப், பொருள்படு நிலையில் வேறுபடும் என்பது யாண்டும் இல்லை.

இருபெயரொட் டாகுபெயர் என்ற குறியீடு போலவே, அன்மொழித் தொகை என்ற குறியீடும் சொல்லிலக்கண வகைப்பட்டது எனக் கொண்ட மயக்கமே, 'எடுத்த லோசை பட்டவழி ஆகுபெயர், படுத்தலோசை பட்டவழி அன்மொழித் தொகை' என்ற பொருளற்ற வுரைக்குக் காரணமாயது.

மற்று, இயற்பெயர்ப் பொரு ளுணர்த்தி நிற்கும் தொகைநிலைத் தொடர்மொழி எடுத்த லோசையாற் கூறப் படும்; ஆகுபெயர்ப் பொரு ளுணர்த்தி நிற்கும் தொகை நிலைத் தொடர்மொழி படுத்த லோசையாற் கூறப்படும், எனின் பொருள் அமைவதாகும்.

இத்தகைய தோர் ஓசை வேறுபாடு அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழிக்கும், அது பிறத்தற் கிட மாகும் பிற தொகைநிலைத் தொடர்மொழிக்கும் உண்டு என்பது, இளம்பூரணர், சேனுவரையர், நச்சினுர்க் கினியர் உரைகளால் உணரத்தகும். வேற்றுமைத் தொகை, பண்புத் தொகை, உம்மைத் தொகை, உவமத் தொகை, வினைத் தொகை, இவ் வைந்து தொகைநிலைத் தொடர்மொழிகளும் நிறைமொழி ஓசை யுடையன என்பதும், அன்மொழித தொகைநிலைத் தொடர்மொழிகள் அந் நிறைமொழி ஓசை யுடையன வல்ல என்பதும், இளம்பூரணர் உரையால் நன்கு புலப்படுகிறது.

பா வகை வேறுபா டுணர்தற்குச் சொன்னிலையா னன்றி ஒலி முறையால், 'செப்பல் ஓசை வெண்பா,' 'அகவல் ஓசை ஆசிரியம்,' 'துள்ளல் இசையன கலி,' 'தூங்கல் இசையன வஞ்சி, எனவாங்கு ஓசை வேறுபா டறியும் புலனுடையாரைக் காண்கிலம்.

*'எழுதப் படுதலின் எழுத்தே அவ்வெழுத்து*
*அசைந்துஇசை கோடலின் அசையே'*
*.........................................*
*தொடர்ந் திசைத்தலின் தூக்கெனப் படுமே,' (யா—தி)*

என இலக்கணம் அமைதலின், 'எழுதப்படுதல்' என்பதற்கு வரிவடிவு கொள்ளல், என்பது பொருளா? அன்றி, ஒலிவடிவு கொள்ளல் என்பது பொருளா?

*"மொழிமுதற் காரண மாம்அணுத் திரள்ஒலி, எழுத்து;"*
*"மிடற்றுப்பிறந் திசைப்பது தன்மை எழுத்தே"*

என்ப ராதலின், செவிட்டுமையர்க் கன்றி, மற்றவர்க் கெல்லாம் எழுத்துமுதல் இலக்கியமாகுக ஒலி வடிவே யன்றோ சிறப்பாவது? அவரும் நல்லுயிருடைய மாந்த ராதல் வேண்டும். அல்லாக்கால், எந்நலம், எண்ணலம், என்னலம் எனவும், கரி, கறி எனவும், கலை, கழை, களை எனவும் ஒலி வேறுபாட்டிற் கிணங்கப் பொருள் வேறுபாடு புலப்படுத்தித் திருந்த மொழியும் உணர்வுடையார் அருகிவருதலைத் தடுத்தல் அரிதாம்.

*அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்*
*பெருமை முயற்சி தரும்.*

## 'அகரமுதல்', 'னகரவிறுவாய்'

"இனி, அகரமுதல், னகரவிறுவாய் என்பன பண்புத் தொகை நிலைக்களத்துப் பிறந்த வன்மொழித் தொகை... அற்றேல், தொக்க விருமொழிப் பொருளுந் தாராது புற மொழிப் பொருளைத் தருவது அன்மொழித் தொகை யாகலின், அகரமுதல் னகரவிறுவாய் என்புழி, அன்மொழித் தொகையான் அகரமும் னகரமும் ஒழித்து ஒழிந்த விருபத்தெட்டுமே கொள்ளப்படும்; அவ்வாறன்றி, அவற்றையு முடனெண்ணி முப்பஃதென்ற னிரம்பாதாம் பிறவெனின்,"... — சிவஞான சுவாமிகள் அருளிச் செய்த தொல்காப்பியச் சூத்திரவிருத்தி; யா. ந. ஆறுமுக நாவலர் பதிப்பு, பக். 43.

*எழுத்தெனப் படுவ அகரமுதல் னகரவிறுவாய்*
*முப்பஃ தென்ப.........,*

என்பதில், முதல், இறுவாய் என்ற மொழிகள் முறையே ஐந்தாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை உருபுகளாய்ப் பொருளுணர்த்தி நிற்கின்றன. எனவே, 'எழுத்து எனச் சொல்லப்படுபவை அகரத்தினின்று தொடங்கி, னகரத்தில் முடிதல்வரை யுள்ள முப்பதும், எனக் கூறுவர் முன்னை ஆசிரியர்,' எனப் பொருள் காண்பது நேரிதும் எளிதும் ஆகும்.

மொழிகளின் பொருள் நிலை முறைக்கு ஏற்பச் சொல்லிலக்கணமும், தொடர்நிலை முறைக்கு ஏற்பத் தொடரிலக்கணமும் கூறப்படும் என்க.

## அன்மொழித் தொகையெல்லாம் ஆகுபெயரே: தொகைநிலைத் தொடர் மொழியில் வரும் ஆகுபெயர்.

" '*திருநுதல் மகரப்பகுவாய் தாழ*' (திரு-டை 24-25) சுறுவினது அங்காந்த வாயாகப் பண்ணின தலைக் கோலம்... மகரப்பகுவாய் : ஆகுபெயர்.

'*குன்று குயின்றன்ன ஓங்குநிலை வாயில்*' (நெடு-டை 88) ஓங்கின நிலையையுடைய கோபுரத்தை ஓங்குநிலை என்றார் : ஆகுபெயர்." — மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர்.

மகரப் பகுவாய் — மகரத்தினது பகுவாய் போற் செய்யப்பட்டது: 6-ம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. மகரம் ஒரு பெயர்: பகுவாய் வினைத்தொகையாய் அமைந்த ஒரு பெயர்: இரு பெயரும் ஒட்டி நின்று ஆகுபெயராய்த் தலைக் கோலத்தை உணர்த்தின: இருபெயரொட் டாகுபெயர்.

ஓங்குநிலை — வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. ஓங்கு ஒரு வினை; நிலை ஒரு

பெயர்: வினையும் பெயரும் ஒட்டிநின்று ஆகுபெயராய்க் கோபுரத்தை உணர்த்தின: வினைபெயரொட் டாகுபெயர்.

"'களிற்றுயிர் தொடுமின்' (புறம். 152-15)...... களிற்றுயிர் என்றது ஆகுபெயரால் களிற்றினது கைபோலும் வடிவுடைய பெருவங்கியத்தை."... — புறநானூற்றின் உரைகாரர்.

களிற்றுயிர் — 6-ம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. (உயிர் என்ற முதனிலைத் தொழிற் பெயர் ஆகுபெயராய் உயிர்த்தலையுடைய துதிக் கையை உணர்த்திற்று): களிறு ஒரு பெயர்; உயிர் ஒரு பெயர்: இருபெயரும் ஒட்டிநின்று ஆகுபெயராய்ப் பெரு வங்கியத்தை உணர்த்தின: இருபெயரொட் டாகுபெயர்.

"'மலையாற்றுப் படுத்த மூவிரு கயந்தலை' (பரிபா. 5:10) – மென் தலையினையுடையாய்... கயந்தலை என்பது பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; அஃது ஈண்டு ஆகுபெயராய் அண்மை விளி யேற்று நின்றது." — பரிமேலழகர்.

கயந்தலை — கயம் பண்புப் பெயர்; தலை சினைப் பெயர்; இருபெயரும் ஒட்டி நின்று ஆகுபெயராய் அத்தலை உடையானை உணர்த்தின: இருபெயரொட் டாகுபெயர், என்பது அவர் கருத்தாகும்.

'தடவுங் கயவும் நளியும் பெருமை.' (தொல். உரி. 22)
'கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்.' ( ,, ,, 24)
என்பதற் கிணங்கக் கய என்பதை உரிச்சொல்லாகக் கொண்டு, கயந்தலை அடையடுத்த வாகுபெயர் என்பதே நன்று.

"இனி, ஆதி றென்றதனானே...... பொற்றொடி யென்னும் இருபெய ரொட்டால் பொன்னுந் தொடியு மன்றி, அணிந்தாளைக் கூறுவனவும், அவைபோல்வன

பிறவும் ஆகுபெய ராம், எனக் கொள்க.... இக் கருத்தே பற்றி யன்றே, 'அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை,' என்றவழிப் பரிமேலழகரும், கனங்குழை என்றதனை ஆகுபெயரென்றதூஉ மென்க."—இலக்கண விளக்கம், சூ. 192 உரை.

ஊழிற் பெருவலி யாவுள (குறள் 330) — "பெருவலி ஆகுபெயர்"—பரிமேலழகர். "பெருவலி-பெரிய வலியை உடையவற்றைக் குறித்தலால்...... பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை... அன்மொழித் தொகை ஒரு வகையால் ஆகுபெயரில் அடங்குவது பற்றிப் 'பெருவலி—ஆகுபெயர்'; என்றார். சிலப்பதிகார வுரையில் அடியார்க்கு நல்லார், 'அருந்திறல் (-இராமன்.) அன் மொழித் தொகை யாகுபெயர்', என்பதும் இதுபற்றியே யாதல் வேண்டும்" — திருக்குறள், வை. மு. ச. குறிப்புரை.

ஆய்மயில் கொல்லோ கனங்குழை (குறள் 1081) — "கனங்குழை—ஆகுபெயர்"—பரிமேலழகர். "கனங்குழை ...குழையைப் பூண்டாளைக் காட்டுவதால் ஆகுபெயர் எனப்பட்டது. அடியார்க்கு நல்லார் 'அருந்திறல்' என்பதை அன்மொழித் தொகை யாகுபெயரென்று உரைத்ததும் ஈங்குத் காணத்தக்கது. சேனாவரையரும் இங்ஙனமே கூறுவர்"—திருக்குறள், வை. மு. கோ, குறிப்புரை.

"அன்மொழித் தொகை யெல்லாம் ஆகுபெயராகும்... புறம் கசு-ல், 'கொடுவரி பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; ஆகுபெயருமாம்,' என்றும் அத னுரைகாரர் கூறுகின்றனர்... 'அருந்திறல் பிரிந்த அயோத்தி போல,' (சிலம்பு கங:சஙரு) 'அருந்திறல்' அன் மொழித் தொகை யாகுபெயர் என்றனர் அடியார்க்கு நல்லார்... கககரு-வது குறளிலுள்ள, 'தொடலைக் குறுந் தொடி,' என்ற தொடரை, 'அப் பெயர் உவமைத்

தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை', என்றார் (பரிமேலழகர்). அத்தொடர் தலைவிக்கும் பெயராக நிற்றலால், 'அப்பெயர்' என்றார். எனவே ஆகுபெயர் என்பதாயிற்று......

இவ்வாசிரியர்கள் அன்மொழித் தொகையை ஆகுபெயர் என்று கொள்ளுதலைக் காண்க." — தொல். சொல். சேனா விளக்கவுரை (சூ. 114): **வித்துவான் ஆ. பூவராகம் பிள்ளை.**

## ஆதலின்

*ஐந்தொகைப் புறத்துப் பிறதொக லன்மொழி*
*ஆகு பெயரே அவைதாம்*
*இருபெய ரொட்டும் வினைபெய ரொட்டும்.*

I. அன்மொழித் தொகையானது

1. வேற்றுமைத் தொகை, உவமத் தொகை, பண்புத் தொகை, உம்மைத் தொகை, வினைத் தொகை என்ற ஐந்து தொகைக்கண்ணும் பிறந்து, ஈற்றில் வேறு மொழியுந் தொக்குநின்று வழங்குவது;

2. நிலைமொழி வருமொழி என இரண்டு பாகமாய் அமைவது;

3. நிலைமொழி வருமொழிக்கு அடையாகி நிற்பது;

4. நிற்கும் மொழிகளில் அல்லாமல் ஈற்றில் தொக்கு நின்ற புறமொழியில் பொருள் சிறக்க வருவது;

5. திரண்டிசைக்கும் ஒருசொல் நடையை யுடையது;

6. வருமொழி பெயராகவே அமைந்து நின்று, ஒரு பெயர்ச்சொல் நடையைக் கொள்வது;

7. பெயர்ச்சொல் போலவே பயனிலை கொள்ளலும் வேற்றுமை யுருபுகளை ஏற்றலும் ஆகிய இயல்பை யுடையது;

8. இயல்பான பொருளை உணர்த்தாமல், நிற்கும் மொழிகளின் தொகை யாற்றலால் இயைபுடைய வேறுபொருள் உணர்த்துவது;

9. எனவே, இயற்பெயர், ஆகுபெயர் என்ற இரண்டு வகையில் ஆகுபெய ராவது;

10. தொடரிலக்கண முறையால் அன்மொழித் தொகை எனப் பெயர் பெற்றது;

11. சொல்லிலக்கண முறையால் ஆகுபெயர் வகையாத லன்றி வேறிலக்கணம் பெறாதது;

12. ஆகையால், 'தொகைநிலை யாகுபெயர்,' என்னும் பெயர் பொருந்துவது.

II. வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்ததும், பண்புத் தொகைப் புறத்துப் பிறந்ததும், உவமத் தொகைப் புறத்துப் பிறந்ததும், உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்தது மாகிய நான்கு அன்மொழித் தொகைகளும், நிலைமொழியும் வருமொழியும் பெயராய், ஒட்டி நிற்பன வாதலின் இருபெயரொட் டாகுபெயர்.

III. வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையில் நிலைமொழி வினையும், வருமொழி பெயருமாய் ஒட்டி நிற்றலின், வினை பெயரொட் டாகுபெயர் எனப்படுவதாம்.

## ஆகுபெயர் வகையும் அவற்றின் மொழி வகையும்

I. ஆகுபெயர்– *தனிமொழி*: 1. பொருளா (–முதலா)கு பெயர்: *தாமரை கட்டி அழகுபடுத்தினர்–தாமரை* அதன் மலருக்கு ஆயது. 2. இட வாகுபெயர்: சைனாவில் உண்டான்.— சைனா, அந் நாட்டிற் செய்த தட்டுக்கு ஆயது. 3. கால வாகுபெயர்: வேனில் வீசியது.— வேனில், அக் காலத்துக் காற்றுக்கு ஆயது. 4. சினை யாகுபெயர்: கொழுந்து நட்டான்.— கொழுந்து, அதன் செடிக்கு ஆயது. 5. பண்பா (–குணவா) கு பெயர்: அந்த

வெகுளியிடம் பேசேல்.—வெகுளி, குணம், அதனையுடைய வனுக்கு ஆயது. 6. தொழி லாகுபெயர்: பாடலுக்கு உரை கற்றேன்,—பாடல் தொழிற்பெயர், கவிக்கு ஆயது.
(பிறவும் பக். 20—22 காண்க)

II. அடையடுத்த வாகுபெயர்—(அ) தொகாநிலைத் தொடர்மொழி: 1. உரிச் சொற்றொடர், 2. இடைச் சொற்றொடர்:—

1. உரிச்சொற்றொடர்: தனது நனிவருத்தங் கூறினான். — வருத்தம், வருந்திய நிகழ்ச்சிக்கு ஆயது; நனி உரிச்சொல், அதற்கு அடையாய் நின்றது. 2. இடைச்சொற்றொடர்: மற்றொன்று சூழினுந் தான் முந்துறும். — ஒன்று, ஒருபாயத்துக்கு எண்ணலளவை யாகுபெயர்; மற்று இடைச்சொல், அதற்கு அடையாகி நின்றது. (ஆ) தொகைநிலைத் தொடர்மொழி:— 1. வேற்றுமைத் தொகை அடையாடுத்த வாகுபெயர், 2. வினைத்தொகை அடையடுத்த வாகுபெயர், 3. பண்புத் தொகை அடையடுத்த வாகுபெயர், 4. உவமத் தொகை அடையடுத்த வாகுபெயர்.—

1. வேற்காளை வந்தான்—காளை-உவம வாகுபெயராய் வீரனுக்கு ஆயது. வேல், வேலையுடைய வீரன் என ஆகுபெயர்ப் பொருளுக்கு அடையாகி நின்றது. 2. பணிபாவை இயம்பினாள். — பணிதல், பாவைக்கு அடையாகாமல், போன்றவளுக்கு அடையாகி நின்றது. 3. வெள்ளெருமை வருகிறான்.—வெண்மை, எருமைக்கு அடையாகாமல், எருமை போன்றவனுக்கு அடையாகி நின்றது. 4. தாய் தன் அன்னக் கிளியைத் தேடினாள். —கிளி, அதனைப் போன்றாளுக்கு உவமவாகுபெயர்; அவள் அன்னம் போன்ற நடையை யுடையவள். அன்னம், கிளிக்கு அடையாகி நிற்கவில்லை.

III. இருபெயரொட் டாகுபெயர். — அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழி:

1. தசரதன் தன் குலமுதலை இழந்தான். — குலத்துக்கு முதலாகிய மகன்: வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; குலம், முதல் என்ற இருபெய ரொட்டிய ஆகுபெயர்.

2. ஆண்டகை பாராட்டினர். — ஆண்மையாகிய தகை யுடையான்: பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; ஆண்மை, தகை என்ற இரு பெய ரொட்டிய ஆகுபெயர்.

3. எஃகுத்தோள் கண்டு அஞ்சினர். — எஃகு போலும் தோளையுடைய வீரன்: உவமத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; எஃகு, தோள் என்ற இருபெய ரொட்டிய ஆகுபெயர்.

4. சுக்குமிளகு குடித்து நோய் தீர்ந்தது. — சுக்கும் மிளகுங் கலந்த மருந்து: உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; சுக்கு, மிளகு என்ற இருபெய ரொட்டிய ஆகுபெயர்.

VI. வினைபெயரொட் டாகுபெயர். வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; (பக். 11-15)
(க) பணிமொழியே புகழுக் குரியாள். — பணிந்த மொழி பேசுபவள் என விரிதலின், வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழி. பணிதல், மொழிக்கு அடையாகி நின்றது. அன்றி, மொழி பேசுபவளுக்கு அடையாகி நின்றதாகக் கொள்ளலாகாது.
(உ) நிறைகுடம் தவறமாட்டான். — நிறைந்த குடம் போன்றவன் எனப் பொருள்பட்டு, நிறை என்ற வினையும், குடம் என்ற பெயரும் ஒட்டி நிற்றலின் வினைபெயரொட் டாகுபெயர்.

## யானைக்கும் அடி சறுக்கும்

இலக்கணக் கொத்துரை: பாயிரம் சூ: 15—28.

15. *நூலா சிரியர் கருத்தினை நோக்காது*
*ஒருகூத் திரத்திற் கொவ்வொ ராசிரியர்*
*ஒவ்வொரு மதமாய் உரையுரைக் குவரே;*
*அவ்வுரை யதனுள் அடுத்தவா சகங்கட்*
*கவர்கருத் தறியா தவரவர் கருத்தினுட்*
*கொண்ட பொருள்படப் பொருள்கூ றுவரே.*

........................................................

23. நூலுரை போதகா சிரியர் மூவரும்
முக்குண வசத்தான் முறைமறைந் தறைவரே.

.......................................................

27. அதிமதி நுட்பமோ டநீகலை கற்பினும்
விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பார்,
..................................  — சுவாமிநாத தேசிகர்.

"இனிச், சேனாவரையர், ஆகுபெயரும் அன் மொழித் தொகையும் ஒன்றே, எனவும், இயற்பெயர், ஆகுபெயர் எனப் பெயர் இரண்டாய் அடங்கும்வழிப் பொற்றொடி என்பது ஒரு பெயர்ப்பட்டது; அதுவே அன்மொழித் தொகை யாதலும் உடைமையான் எச்சவிய லுள்ளுங் கூறப்பட்டது, எனவுங் கூறினர். அது வட நூல் விதியோடு முரணுதலானும், வடநூலோடு மாறு கொள்ளாமற் கூறலே ஆசிரியர் மோற்கோள், என, 'அதனி னியறல்', என்னுஞ் சூத்திரத்துத் தாமுங் கூறினு ராகலானும் அவர்க்கு அது கருத்தன்று என்க... இன்னும் ஒரோவோர் இடங்களில் இவ்வாறே மயங்கிக் கூறுவர்.

அங்ஙனம், ஒரோவழி மயங்குதல் பற்றி அவரை இகழற்க, நச்சினார்க்கினியர் முதலியோர் போல, யாம் பிடித்ததே சாதிப்பேம், என்னுஞ் செருக்கால் யாண்டும் மயங்காமையின். முக்குணங்களும் மாறிமாறி வருதலின் அதுபற்றி எனைத்துணை நுண் ணறிவாளரும் ஒரோவழி மயங்குதல் இயல்பு என்க. இக் கருத்தே பற்றி யன்றே,

'அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு;

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்,'

என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும், என்பது." — சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த சூத்திர விருத்தி, யா. ந. ஆறுமுகநாவலர் பதிப்பு.

களிற்றியா னைக்கே அடிசறுக்கும் என்னின்
வெளிற்றுமைக் கென்னுமோ தான்.

---

அருள் அச்சகம், பாளையங்கோட்டை - மார்ச்சு 1967 — 1000.